[6th August 1965

மீன் பிடிப்பதற்கான அனுமதி

*97 கேள்வி.—திரு. மு. கருணாநிதி : கனம் செய்தி-விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மீன் பிடிக்க விரும்புகிறவர்கள் லைசென்ஸ் வாங்க வேண்டும் என்று அரசாங்கம் ஏதேனும் உத்திரவிட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எந்த அடிப்படையில் லைசென்ஸ் வழங்கப் படுகிறது ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) ஆம்.

(இ) (1929-ம் திருத்தப்பட்டுள்ள) 1897-ம் ஆண்டு இந்திய மீனவச் சட்டத்தின் கீழ், குறிப்பிட்ட நீர் நிலைகளில் மீன் பிடிப் பதை முறைப்படுத்தும் பொருட்டு, விதிகள் இயற்ற மாநில அரசாங்கத்திற்கு உரிமை உண்டு. அதை அனுசரித்து மாநில அரசாங்கத்தின் ஆதிக்கத்திலுள்ள சில ஆறுகளிலும் ஏரிகளிலும் மீன் பிடிப்பதை முறைப்படுத்துவதற்குரிய சில விதிகளை அரசாங் கம் 1929-ல் இயற்றியது. இந்தப் பட்டியல், மாநிலங்கள் திருத்தி அமைக்கப்பட்டிருப்பதை யொட்டி தக்க வகையில் திருத்தப்பட்டு வருகிறது.

இப்போது அமுலில் உள்ள விதிகளின்படி, அப்பகுதிகளில், அரசாங்கம் வழங்கும் குத்தகைப் பத்திரம் அல்லது உரிமத்தின் கீழ்தான் மீன் பிடிக்க அனுமதிக்கப்பட்டு வருகிறது. மீனவர் கூட்டத்தினரிடையே தகராறுகள் ஏற்படக்கூடிய பகுதிகளில் இம் முறை பின்பற்றப்படுகிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே மீன் பிடிப்பதற்கான லைசென்ஸ் பெறுவதற்கு என்னென்ன தகுதி கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன ?

கனம் திரு. கோ. பூவராகன் : இதற்கான சில சட்டங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் பல மாதிரியாக நடக்கிறது. அதாவது சில மாவட்டங்களில் நீர்த்தேக்கங்கள், ஏரிகள், குளங்கள் முதலியவற்றுக்கு தகுந்தவாறு அனுமதி கொடுக்கப்படுகிறது. சில இடங்களில் மாதம், சில இடங்களில் வருடம் என்ற அளவில் அனுமதி கொடுக்கப்படுகிறது.

திரு. து. ப. அழகமுத்து : இந்த அனுமதி, குத்தகை முறையில் விடப்படுகிறதா அல்லது லைசென்ஸ் முறையில் வழங்கப்படுகிறதா?

கனம் திரு. கோ. பூவராகன் : சில இடங்களில் குத்தகை முறை யில் கொடுக்கப்படுகிறது. சில இடங்களில் லைசென்ஸ் முறையில் வழங்கப்படுகிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இந்த அனுமதி வழங்குவது நிலப்பரப்பில் கொடுப்பது போல சமுத்திரத்திலும் கொடுப்பதற்கு ஏதாவது கொள்கை இருக்கிறதா ?

கனம் திரு. கோ. பூவராகன் : சமுத்திரத்தில் கொடுப்பதற்கு அப்படி ஒன்றும் யோசனை இல்லை.

திரு. எம். எஸ். மணி : ஸார், கிராமங்களில், குளங்களில் மீன் பிடிக்கின்றவர்களுக்கு இந்த லைசென்ஸ் முறை ஏதாவது உண்டா? சாதாரணமாக கிராமங்களில், குளங்களில், அந்த கிராமத்திலுள்ள மக்கள் எல்லாம் ஒன்றுகூடி வருடத்திற்கு ஒரு முறை மீன் பிடிக்கின்றார்கள். அப்படியென்றால், இவர்கள் எல்லோரும் லைசென்ஸ் வாங்கவேண்டுமா அல்லது தேவையில்லையா என்பதை அறிய வேண்டுகிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன் : கிராமங்களில் குத்தகை முறையில் மீன் பிடிக்கின்றார்கள். நீர்த்தேக்கங்களில் மீன்பிடிக்கின்றவர்கள் லைசென்ஸ் வாங்கவேண்டும் என்ற முறை இருக்கிறது.

திரு. து. ப. அழகமுத்து : குத்தகை முறையில், யார் அதிகம் தொகைக்கு கேட்கின்றார்களோ அவர்களுக்கு விட்டு விடலாம். லைசென்ஸ் முறை என்று வரும்போது அதற்கென்று ஏதாவது தகுதி நிர்ணயிக்கப்படவேண்டும். அப்படி ஏதாவது தகுதி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா என்றால் அது எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. கோ. பூவராகன் : குத்தகை முறையில் சில தகராறுகள் வரும்போது தான் லைசென்ஸ் வழங்கவேண்டும் என்று அரசாங்கம் பரிசீலனை செய்து முடிவு எடுக்கின்றது. மீன் பிடிக்கின்ற வலைக்கு ஏற்றவாறும், என்னென்ன காலத்திற்கு என்பதை கணக்கிட்டும் லைசென்ஸ் வழங்கப்படுகிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, சமுத்திரத்தில் மீன் பிடிக்கின்றவர்களுக்கு எந்த விதமான லைசென்ஸ் முறையும் கட்டுப்பாடும் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த முறையில் ஒன்றும் இல்லாமல் இருப்பதினால்தான் மரக்காணம் பகுதியில் ஒருவர் மீன் பிடித்துக்கொண்டிருந்த இடத்தில் மற்றவர்கள் வரக்கூடாது என்று தகராறு ஏற்பட்டு இப்போது அது ஹைக்கோர்ட் வரையிலும் வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, சர்க்கார் நேரடியாக இதைப்பற்றி பரிசீலனை செய்து, யாருக்கும் இடைஞ்சல் இல்லாத வகையில் ஒரு முறையை கொண்டு வருவதற்கு வழிவகை செய்வார்களா ?

கனம் திரு. கோ. பூவராகன் : கடலில் அப்படி ஒரு வரையறை செய்வதற்கில்லை, இதுவரை பிடிக்கலாம், இதுவரை பிடிக்கக் கூடாது என்று சொல்வதற்கில்லை. அவ்விதம் அனுமதி கொடுப்பதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. ஆகவே தான் அப்படி அனுமதி கொடுக்க முடியாது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

[6th August 1965

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, இந்த மீன் குத்தகை விடுவதில் மீனவர்களுக்கு முதல் சலுகை அளிக்கப்படுகிறதா ?

கனம் திரு. கோ. பூவராகன் : மீனவர்களுக்குத்தான் முதல் சலுகை. அதற்குப் பின்னுல் தான் மற்றவர்களுக்கு.

மண்டபத்தில் நார்வே மீன் பிடிப்புத் திட்டம்

*98 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் செய்தி-விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மண்டபம் நார்வே மீன் பிடிப்புத் திட்டத்தில் மீனவர்களுக்கு அளிக்கப்படும் விசைப்படகுத் தேர்வுக்கு மீனவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்களா ?

(இ) ஆம் என்ருல் எத்தனை பேர் ?

கனம் திரு. கோ. பூவராகன் : ஆம். மண்டபம் நார்வே மீன் பிடிப்புத் திட்டத்தில் மீனவர்களுக்கு அளிக்கப்படும் விசைப் படகு தேர்வுக்கு இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 60 மீனவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

திரு. கரு. சீமைச்சாமி : ஸார், இந்த விசைப்படகு பயிற்சிக்கு சரியான முறையில் ஆட்களை தேர்ந்தெடுக்கவில்லை என்று நினைக்கிறேன். கடலே பார்க்காதவர்கள்கூட அவர்கள் மீனவர்கள் என்று கருதி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர்கள். இக்குறையை நீக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : கடலே பார்க்காதவர்களை தேர்ந்தெடுக்க முடியாது. இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மக்கள் கடலையே பார்த்திருக்கமாட்டார்கள் என்று சொல்வது திரு. சீமைச்சாமி அவர்களுக்கு பொருந்தாது என்று நினைக்கிறேன்.

திரு. எம். வி. கரிவேங்கடம் : தலைவர் அவர்களே, இந்த பயிற்சிப் பள்ளியில் என்னென்ன பயிற்சி தரப்படுகிறது ? இதற்கு எவ்வளவு செலவு ஆகும் ?

கனம் திரு. கோ. பூவராகன் : இப்போது தான் பயிற்சி ஆரம்பித்திருக்கிருர்கள். பயிற்சிக்கு செலவு என்ன ஆயிற்று என்று இப்போது சொல்வதற்கில்லை. இதில் வலை பின்னுவது, கடலில் நெடுந்தூரம் செல்வது, மீன்பிடிக்கின்ற சில முறைகள், போட் ரிப்பேர் செய்கின்ற முறை முதலிய பயிற்சிகள் சொல்லிக் கொடுக்கப்படும்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : மீனவர்களுக்கு ஏதாவது இன்ஷூரன்ஸ் திட்டம் இருக்கிறதா ? இல்லையென்ருல் அவர்கள் கடலில் நெடுந்தூரம் செல்வதால் அடிக்கடி பல ஆபத்துக்கள் ஏற்படுகின்றன. இதற்காக மீனவர்களுக்கு இன்ஷூரன்ஸ் திட்டம் கொண்டு வருவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?